வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 500 / ஆ4 / 2021 நாள் –04–2021

பொருள் தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – மேலநிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு 2021 – பொதுத் தேர்வு ஒத்தவைப்பு – செய்முறைத் தேர்வுகள் நடத்துதல் சார்பான அறிவுரைகள் வழங்குதல் சார்பு.

பார்வை 1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு, செ.வெ.எண்.219, நாள்.18.04.2021

2. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.025650 /எச்1 /2020, நாள். 08.04.2021 மற்றும் 19–04–2021

---

பார்வை 1ல் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீட்டில், +2 மாணவர்களுக்கான தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மூலம் நடத்தப்படும் பொதுத்தேர்வு தள்ளி வைக்கப்படுகிறது எனவும், +2 மாணவர்களுக்காக தற்போது நடைபெற்று வரும் செயல்முறைத் தேர்வு (Practicals) மட்டும் ஏற்கனவே திட்டமிட்டபடி நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் தொடர்பாக அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் 05.05.2021 முதல் 21.05.2021 மற்றும் 31.05.2021 ஆகிய நாட்களில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு ஒத்திவைக்கப்படுகிறது.

2. மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு பின்னர் நடைபெறும் நாட்கள் குறித்த விவரம், தேர்வுகள் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு முன்னர் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் அறிவிக்கப்படும்.

3. தற்போது நடைபெற்று வரும் செய்முறைத் தேர்வு (Practical Examination) மட்டும் ஏற்கனவே திட்டமிட்டபடி, பார்வை 2ல் காணும் அரசு தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடத்தப்படவேண்டும் .

4. செய்முறைத் தேர்வு மற்றும் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை ஏற்கனவே அரசு தேர்வுகள் இயக்ககத்தால் அறிவுறுத்தப்பட்ட நாட்களில் இணையதளத்தின் வாயிலாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

1. அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்

மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.